# சுட்டி

ஜன' 86
மாத இதழ்
60 காசு
59





FREE E - BOOKS , www.thamizham.net.,

FREE E - BOOKS , www.thamizham.net.,

## நண்பர்களே!

முன்பு எழுதிய 'அவசரக் கழகத்திற்கு' உடுக்கை இழந்தவன் கை போல' எதிரொலித்து செயல்பட்ட சுட்டியின் உண்மை நண்பர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம்.

"சுட்டியின் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கட்டுகிறேன், ஒரு லட்சம் வரை முதலீடு போதுமா? பெரிய அளவில் நடத்தலாம்" என்று ஒரு வணிக ஏட்டு முதலாளி முன்வந்தார். அவர் விரும்புகின்ற மாதிரி, சுட்டி லாபம் கொழிக்க நடத்தப் படுமானால் அது "சுட்டி" என்ற பெயரில் ஒரு மாபெரும் மசாலா பத்திரிகையாக உருமாறும். லட்சக் கணக்கில் விற்கும். கடையெங்கும் மின்னும். திரும்பும் பக்கமெல்லாம் விளம்பரமாகும். ஆனால்,

*சுட்டியின் இதயமான வாசக நண்பர்களின் நட்பைக் குழி தோண்டிப் புதைத்து அந்த சமாதி மேல் சுட்டி ஒரு வசதியான தாஜ்மகாலை எழுப்ப ஒருக்காலும் உடன்படாது!*

தன் கண்ணை விற்று சித்திரம் வாங்க சுட்டி எக்காலத்திலும் முற்படாது. சுட்டியின் பொருளாதார இடர்கள் நம் இறக்கைகளைச் சீவமுடியும். ஆத்மாவை அனாதையாக்கி விட முடியாது. *இறக்கை இழந்தாலும் நாம் ஊர்ந்து போய் நம் இலக்கை அடைவோம்.*

அடுத்த இதழ் நம் 60 வது இதழ்! திரும்பிப் பார்த்தால் மலைக்க வைக்கிறது. இந்த 60-வது இதழில், சுட்டி எந்த சோதனைகளிலும் தன்னை இழக்காமல் நிற்கும் உறுதியைத் தொடரும் என்ற நம்பிக்கையை வாசகர்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்!

கடந்த 60 மாதத்து சுட்டியின் போக்கை வாசக நண்பர்கள் விமர்சித்து எழுத வேண்டுகிறோம். விமர்சனங்களே சுட்டியின் தரத்தை உயர்த்தும். நண்பர்களோடு நீங்கள் விவாதிப்பதோடு, ஆசிரியர் குழுவுக்கு அவசியம் எழுதவும் வேண்டுகிறோம். சிறந்தவை வெளியிடப்படும். வருபவை அனைத்தும் சுட்டிக்கு உதவும்.

பிற உங்களிடமிருந்து.

அன்புடன்
ஆசிரியர் குழு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

- உயர்நிலைப்பள்ளியின் தாழ்ந்த நிலை கட்டுரை கி.பி.2000-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட வேண்டியது. ஆயிரக்கணக்கான பள்ளிகளில் வகுப்பறைகளே இல்லாமல் மரத்தடியில் பள்ளிகள் நடக்கின்றன. நீர் என்னவென்றால் விளையாட்டுத் திடல் இல்லையென்று அங்கலாய்க்கிறீர்

— எல். டி. ராஜன், ஆறுமுகனேரி

'அவலம் ஆசிரியரும்', 'ஆசிரியர் போராட்டத்தின் நியாயங்கள்' என்ற தலைப்புகளில் ஆசிரியர்களுக்கு ஆதரவாக எழுதியமைக்கு நன்றி தெரிவிக்கிறோம்

— டி. இவான்ஸ்பால், ஆசிரியர், [illegible] உயர்நிலைப்பள்ளி, மணிமுத்தாறு

அட்டைக் கருத்துப் படத்தில் மற்ற வார, மாத பத்திரிகைகள் தொடாத டெலிபோன் இலாகாவின் கையாலாகாத் தனத்தினைச் சுட்டிக்காட்டி தங்களது தனித்தன்மையைத் தக்கவைத்துக் கொண்டீர்கள். பாராட்டுகள்!

— இரா. வீரராகவன், பொன்னமராவதி

தானியங்களைப் பாதுகாத்து வைக்க ரூ500 கோடி செலவு செய்யவும் - அவற்றைத் திறந்த வெளியில் கொட்டி மக்கி வீணடிக்கவும் செய்யத் தெரிந்த நம் இந்திய அரசுக்கு, சரியான முறையில் பாமர ஜனங்களுக்கு வினியோகிக்கத் திட்டம் தீட்டத் தெரியவில்லையே என்பதை எண்ணிப் பார்க்கும்போது மனம் என்னவோ புழுங்கத்தான் செய்தது! பசிக்கொடுமை பற்றிய கட்டுரை இடம் பெற்றிருந்த இதே இதழில் - பட்டினி பற்றிய மருத்துவக் குறிப்பு இடம் பெற்று விட்டது துர்அதிஷ்ட வசம்தான்!

— பி.எல். பரமசிவம், மதுரை-1

கிராமங்களின் பொதுப்பணித்துறைப்பணிகள் எதுவுமே செயல்படாமல் முடக்கப்பட்டு, வெள்ளச் சேதங்களில் மட்டும் அனுதாப அறிக்கைகளை விட்டு - உணவுப் பொட்டலங்கள் வழங்கி இலவச வேஷ்டி சேலைகள் தந்து ஓட்டைப் பெற்றுவரும் சாமர்த்தியமிக்க தமிழக அரசு எங்கே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கப் போகிறது?

— எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

FREE E - BOOKS , www.thamizham.net.,



"குடி குடியைக் கெடுக்கும்"
மதுக் கடைகளைத்
திறந்திட்டோம்!
"சிகரெட் குடிப்பது
உடல் நலத்திற்குத்
தீங்கானது".
அச்சடித்து சிகரெட்
விற்கிறோம்!
இது போன்று
"தேர்தல் வாக்குறுதிகள்-
மக்கள் ஏமாற மட்டுமே!"
என்று அறிவித்து விட்டு
வாக்குறுதிகளை
அள்ளி வீசினால்
என்ன?

எஸ்.ஏ. சுகுமாரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது சூரிய மருத்துவம்

● சூரிய மருத்துவம் சூரியக் குளியலால் நிகழ்த்தப் பட வேண்டும். விடியற்காலை செவ்விள ஞாயிறே இதற்கு ஏற்றது. காலை 9 மணிக்கு மேல் இது ஏற்றதல்ல. உள்ளுடைகளுடன் மட்டும் உடலின் முன் பகுதியிலும், பின் பகுதியிலும் வெய்யில் படும்படி ஸ்டூலில் அமர்க. 5 நிமிடத்தில் ஆரம்பித்து படிப்படியாக ஒரு மணி வரை அதிகரிக்க.

● விடிகாலை சூரியனின் சாய்ந்த ஒளிக்கதிரில் புற ஊதா கதிர்கள் உண்டு. இவை உடலுக்கு சக்தி தருபவை. விட்டமின் டி (D) இதில் நிறைய உண்டு. இந்த விட்டமின் பற்றாக் குறையால், குழந்தைகளுக்கு வரும் "ரிக்கெட்ஸ்", எலும்பு சம்மந்தப்பட்ட நோய்கள் சூரியக் குளியலால் குணமாகும்.

● சூரிய ஒளியின் இரசாயனக்கதிர்கள், இரத்த சிவப்பு அணுக்களின் உற்பத்தியைப் பெருக்குகின்றன. சோகை நோய்க்கு இது மாமருந்து

● முடி கொட்டுபவர்கள் அதனை நிறுத்த சூரியக் குளியல் செய்யுங்கள்! முடி செழித்து வளர கதிரொளி உதவும்.

● கதிரொளி தோலின் வேலையைச் செம்மையாக்குகிறது. தோல் நோய்கள் வராமல் தடுக்கிறது. நோய்க்கிருமிகளை அழிக்கிறது. தோல்நோய் தொல்லைகள் தொலைய சூரிய மருத்துவம் உதவும்.

● எல்லா வித கண்கோளாறுகளுக்கும்: கண்ணை மூடிக்கொண்டு சூரியனை நோக்குக. விழியை, பக்க வாட்டிலும், மேலும் கீழும் நகர்த்துக

● சூரியக்குளியலின் போது மயக்கம் வருவோர், நரம்பு வியாதி உள்ளோர், இரத்த சிதைவுள்ளவர்கள் இம்மருத்துவம செய்யக் கூடாது.

சூரிய மருத்துவம் பற்றி மேலும் அறிய நேரில் அணுகுக:-
சென்னை காதி கிராமோத்யோக் பவன், 236, அவ்வை சண்முகம் சாலை, சென்னை-600 086; நாள்: திங்கள், வெள்ளி; நேரம்: மாலை 6.30

[அடுத்து : நமது இசை மருத்துவம்] ● சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

வருமானவரிச் சட்டம் ஏற்படுத்தப் பட்டதின் முக்கியமான ஒரு நோக்கம் பணத்தை ஒரே இடத்தில் குவிய விட்டால் வேறு பாடுகள் இன்னும் அதிகமாகும் என்பதாகும்! ஆனால் இந்த நோக்கத்தை இது அடைந்ததா என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாகும்! ஒரு பக்கம் வரி ஏய்ப்பவர்கள் இருக்க, மற்றொரு பக்கம் வருமான வரி சட்டத்திற்குள்ளிருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு வரி வலையில் சிக்கிக் கொள்ளாமல் பல திமிங்கிலங்கள் தப்பி விடுகின்றன. அப்படிப்பட்ட ஒரு ஓட்டையை இப்போது பார்ப்போம்!

# வருமான வரி சட்ட வேடிக்கை பாரீர்!

தனி மனிதர் (Individual), இந்து கூட்டுக் குடும்பம் (Hindu undivided family), கம்பெனி (company), கூட்டு நிறுவனம் (firm) போன்ற ஏது நிலைகளில் உள்ளவர்கள் ஆண்டுக்கு ரூ 18,000 க்கு மேல் சம்பாதித்தால் வருமான வரி கட்ட வேண்டும். இப்பொழுது நாம் நான்கு பேர் உள்ள A, B என்ற இரண்டு குடும்பங்களை எடுத்துக் கொள்ளுவோம். ஒவ்வொரு குடும்பத்திலும் கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்று நான்கு பேர் இருப்பதாகக் கொள்வோம்.

A-யில் உள்ள குடும்பத் தலைவர் அலுவலகம் ஒன்றில் பணியாற்றுபவராகவும், B-யில் உள்ள குடும்பத் தலைவர் ஒரு துணிக் கடை வைத்துள்ளதாகவும் கொள்வோம். இரண்டு குடும்பங்களிலும் மீதமிருக்கும் மூன்று நபர்களும் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருப்பதாகக் கொள்வோம். A குடும்பத்தில் உள்ள குடும்பத் தலைவர் ரூ18,000க்கு மேல் ஆண்டொன்றுக்கு சம்பளமாகப் பெற்றால், வருமான வரியை அலுவலகத்திலேயே

FREE E - BOOKS , www.thamizham.net.,

பிழைத்து விடுவார்கள்.

B குடும்பத்தலைவர் துணி வியாபாரத்தில் ரூ 18,000க்கு மேல் சம்பாதித்து விட்டால், உடனே தனது மனைவியின் பெயரில் பெயருக்காக ஒரு வியாபாரம் நடக்கிறது என்று கணக்கை கூறி, தன்க்கு ரூ 18,000, தன் மனைவிக்கு ரூ 18,000 வருமானம் என்று காண்பித்து வரி கட்டாமல் விட்டு விடுவார். ரூ 36,000க்கு மேல் தன் முதல் குழந்தையின் மேலும் ரூ 54,000க்கு மேல் தனது 2-வது குழந்தையின் மேலும், ரூ 72,000க்கு மேல் தனது இந்து கூட்டுக் குடும்பத்தின் மீதும் வியாபாரம் நடப்பதாகக் காண்பித்து ரூ 90,000 வரையில் வரி கட்டாமல் தப்பித்திடுவார். அதற்கு மேல் போனால் ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனி ஆரம்பிக்கலாம்; அதில் வரும் டிவிடெண்டு வருமானத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரை வரி விலக்கு அளிக்கப்படும். இப்படியே சுமார் ரூ 1,00,000 வரை அவர்கள் வரி ஏய்க்கலாம். ஆனால் A-குடும்பத்தலைவர் அவ்வளவு சம்பாதித்தால் சுமார் ரூ 45,000 வரி கட்ட வேண்டியிருக்கும். ஆனால் இரு குடும்பங்களிலும் குடும்பத் தலைவர் ஒருவர் மட்டுமே வருமானத்திற்காக பாடுபடுபவர். இது போன்ற நிலை இருப்பதால் வியாபாரம் செய்யும் பல குடும்பங்கள் பல லட்சங்களுக்கு அதிபதியாக வாய்ப்புள்ளது. வேலைக்குப் போகிறவரது குடும்பம் அவ்வாறாக வாய்ப்பில்லை.

இதற்குப் பதிலாக குடும்பம் என்ற ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, ஒரு குடும்பத்திலுள்ள எல்லோருடைய வருமானத்தையும் கூட்டி, அது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்டால் அக்குடும்பம் வருமான வரி கட்ட வேண்டும் என்று வந்தால் அது நியாயமானதாக, சோஷலிஸ சமுதாயத்திற்கு வழி கோலுவதாக அமையும். செய்வார்களா?

— ஞானம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சீனாவில் முட்டாள்களின் கிராமம்

சிக்சியன் - இது வட சீனாவில் உள்ள முட்டாள்களின் கிராமம். மூளை வளர்ச்சி இல்லாதவர்கள், செவிடர் அல்லது ஊமை இப்படி ஏதாவது ஒரு குறையுடன்தான் இந்த கிராம மக்கள் விளங்கினர். பிறவி ஊனம் இங்கு சர்வசாதாரணமாக இருந்ததால் குழந்தை பிறப்பு என்பது இங்கு ஒரு சோகமான நிகழ்ச்சியாம்.

பழைய காலத்தில், இக்கிராம மக்கள் யாரோ கண்பட்டு இப்படி துர்அதிர்ஷ்டம் நேர்ந்தது என்று நம்பி, நெடுங்காலமாக விழித்து நோக்கிக் கொண்டிருந்த ஒரு குரங்கு சிலையை உடைத்து நொறுக்கினர். அதற்குப் பிறகும் நிலைமை மாறவில்லை.

பிறகு 30 செம்படை வீரர்கள் இங்கு முகாமிட்டு பரிதாபத்திற்குரிய இவர்களை இருண்ட காலத்திலிருந்து மீட்க முயன்றனர். ஆனால் இரண்டில் அவர்களுக்கே குரல்வளை சுரப்பி வீக்கம் ஏற்பட ஊரை காலி செய்ய வேண்டியதாயிற்று.

நம்பிக்கையிழந்து தலைவிதியை நொந்து அழிய இம்மக்கள் முடிவு கட்டிய போது, ஒரு விஞ்ஞானிகளின் குழு யதார்த்தமாக இம்மக்கள் விடுபடாமல் தவித்த பிரச்சனையில் ஆர்வம் கொண்டு ஆய்வு நடத்தியது. புதிரை விடுவித்தது. அந்த கிராமத்து மண்ணிலும், அதில் விளையும் உணவுப் பொருட்களிலும் அயோடின் சத்து இல்லை. இதுவே காலங்காலமாக இந்த மக்களை நோயுற வைத்திருக்கிறது.

தலைவிதியை விஞ்ஞானம் சவுக்கால் அடித்து விரட்டியது. கிராம மக்களுக்கு அயோடின் மாத்திரைகளும், உப்பில் அயோடினும் வழங்கப்பட்ட பின்பு பெரும்பாலான குறைபாடுகள் மறைந்தன. சிக்சியன் கிராமம் இப்போது ஒளி பெற்று விட்டது.

— உலகப்பன் —

FREE E - BOOKS , www.thamizham.net.,

அடுத்த இதழ் சுட்டி 60-இல்

மெரீனா கடற்கரையே...
உன் அழகின் விலை,
ஆறு உயிர்களா?



இலங்கை அரசாங்கம் நம் மீனவர்களைக்
கன்னியா குமரிக் கடலில் சுட்டது!
தமிழக அரசோ அதே மக்களை
மெரீனாவின் கரையில் சுட்டது!

நீரில் போராடி
நிலத்திலும் போராடும்

புதிய தொடர்

அந்த மீனவச் சகோதரர்களின் வரலாறு
பண்பாடு, பொருளாதாரம் முதலியவைகளைப்
பற்றிய தொடர் கட்டுரை.

## மெரீனா முதல் குமரி வரை

# மீனவர்கள்

'சுபவீ' எழுதுகிறார்!

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தண்ணி போட்டு வண்டி ஓட்டினால்...



● குடிகார வண்டியோட்டிகளே!

எச்சரிக்கை! மதுவாடையை முகர்ந்து அறியும் புரட்சிகரமான கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலீஸ்காரரின் மூக்கிற்கு, ஒரு மின்னணுவியல் மாற்று என்று வர்ணிக்கப்படும் இந்த ஆல்கஹால் மீட்டர், வண்டியோட்டிக்குத் தெரியாமல் செயல்படும்.

சாதாரண டார்ச் விளக்கு மாதிரி தோற்றமளிக்கும் இதன் உள்ளே ஆல்கஹால் நுகரும் மின்னணுவியல் சிப் மறைந்திருக்கும். நான்கு செகண்டுகள் வண்டியோட்டி பேசினால் போதும் அவர் வாயிலிருந்து வரும் காற்றை தானாகவே கைப்பற்றி விடும். ரத்தத்தில் உள்ள ஆல்கஹால் அளவை உடனே டார்ச் விளக்கில் உள்ள டிஜிடல் எண்கள் காட்டிவிடும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் எண்கள் காட்டி விட்டால், ஆசாமியை சந்தேகமின்றி பிடித்து விடுவார்கள்.

அதே சமயத்தில் சந்தேகப்பட்டு வீணாக டிரைவரை தொல்லை படுத்தும் அவலத்தை தவிர்த்து விடலாம். நிரபராதி தண்டிக்கப்பட மாட்டார்.

அட போய்யா, இதெல்லாம் நம்மூரிலே நடக்கிற காரியமா, யாரிடம் கதை விடுகிறீர்கள் என்பீர்கள். உண்மைதான். சாராயத்தை வாயில் ஊற்றி கேஸ் பிடிக்கும் நம் போலீஸ்காரர்களுக்கு இதெல்லாம் அநாவசியமே! பிரிட்டிஷ் போலீஸ்காரர்கள் கண்டுபிடித்திருக்கும் இக்கருவி அங்கு நிரபராதிகளை வீணாக சிரமப்படுத்தாமலிருக்க என்கிறார்கள். இங்கு நிரபராதிகளை பிடித்துப் போட உதவும் கருவியிருந்தால் ஆர்டர் தருவார்கள்.

- அருந்தான் -

# சூரிய மின் நிலையம்

பெட்ரோல் பஞ்சம், விலை ஏற்றம், பெட்ரோலின்றி உலகமே கற்கால வாழ்க்கைக்குத் திருப்பப்படும் அபாயம் இவை பெட்ரோலுக்கு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் உலகத்தை உந்துகின்றன. பெட்ரோலுக்கு மாற்றாக விளங்கக் கூடியதில் இன்று முன்னணி வகிப்பது சூரியனின் கதிர்.

இப்பொழுது உலகிலேயே மிகப் பெரிய சூரிய சக்தி மின் உர நிலையம் ஒன்றை அமெரிக்காவில் கட்டி வருகிறார்கள். கலிபோர்னியா மாநிலத்தில் லாஸ் வேகாசுக்கு செல்லும் சாலையில் வலப்புறத்தில் டாகெட் எனும் இடத்தில் அந்த சூரிய சக்தி மின் நிலையம் அமைக்கப்படுகிறது.



அது கட்டி முடிந்து இயங்கத் தொடங்கிவிட்டால் அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் எண்ணெயில் ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் பீப்பாய் எண்ணெய் மிச்சமாகும்.

இதிலிருந்து கிடைக்கும் 10,000 கிலோ வாட் மின்சாரம் 6000 பேர் வசிக்கும் ஒரு பகுதிக்குத் தேவையான மின்சாரத்தை கொடுக்கும்.

இந்த மின்சார நிலையத்தில் நிறைய கண்ணாடி வில்லைகள் வைக்கப்பட்டிருக்கும். அவற்றில் இருந்து பிரதிபலிக்கும் வெயில் எல்லாம் உயரமான ஒரு இடத்தில் வந்து விழுமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

சூரிய ஒளிக்கதிர்கள் வந்து விழும் இடத்தில் தண்ணீர்த் தொட்டி இருக்கும். சூரியக் கதிர்களால் தண்ணீர் சூடேறி

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆவி பறக்கும். அந்த ஆவியைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்கள் இயங்கும்.

பகலில் தான் சூரிய வெளிச்சம் இருக்கும். இரவில் என்ன செய்வது? அந்தப் பிரச்சனைக்கும் இதில் வழியுண்டு.

தனியாக வேறிடத்தில் 10 லட்சம் காலன் தண்ணீர் கொள்ளும் தொட்டி கட்டப்படும். ஜல்லியாக்கிய கருங்கற்களையும் எண்ணெயையும் அதில் ஊற்றுவர். பகலில் கிடைத்த வெப்பத்தைக் கொண்டு இந்தத் தொட்டியால் உள்ள எண்ணெயை சூடாக்கி விடுவார்கள். அது குளிவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் பிடிக்கும். எனவே சூரியன் மறைந்து இரவு ஒரு மணி வரையில் இந்த வெப்பத்தைக் கொண்டு தாராளமாக மின் உற்பத்தி செய்யலாம்.

இந்த சூரிய சக்தி மின் நிலையம் அமைக்க 15 கோடி டாலர் (ரூ 225 கோடி) செலவாகும்.

— நிலா

# மனசாட்சியை இழந்தால்...

ஜம்மு காஷ்மீரின் முதல்வர் ஜி.எம். ஷா அண்மையில் ஸ்ரீநகரில் ஒரு நினைவு நாள் விழாவில் கலந்து கொண்டார். கடமையின் போது உயிர் நீத்த காவலர்களின் சமாதிக்கு மலர் வளையம் வைத்துத் திரும்பிய முதல்வரின் பாதங்களிலும் ஒரு மலர் வளையம் வைக்கப்பட்டது. வைத்தவர் காவல்துறை டெபுடி ஜெனரல் ராம் பிரகாஷ் என்பவர். முதல்வரின் சிந்தனை உணர்ந்த அந்த அதிகாரி, "தமது உயிரை இழந்த காவலர்களுக்கு உமது மலர்வளையம். மனசாட்சியை இழந்த உமக்கு எமது மலர் வளையம்" என்றார். ஆதாயத்திற்காக தமது தாய்க் கட்சியைப் பிரிந்து இந்திரா காங்கிரஸில் இணைந்த முதல்வரின் செய்கையை சுட்டிக்காட்டவே அந்த அதிகாரி இவ்விதம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

செய்தார். அதிகாரியை வேலையிலிருந்து நீக்க உத்தரவிட்டார் கோபமுற்ற முதல்வர். "குடியரசுத் தலைவரால் பணிநியமனம் செய்யப்பட்ட என்னை வீட்டுக்கனுப்ப உமக்கு அதிகாரமில்லை" என்ற அதிகாரியின் துணிச்சலான பதில் முதல்வரை மேலும் தலைகுனிய வைத்தது.

– நிலா

## கழிப்பிடமா? வாரச்சந்தையா?

ஜோலார் பேட்டை (வ.ஆ) அருகில் உள்ளது சந்தை கோடியூர். இங்கு பிரதிவாரம் புதன் கிழமை சந்தை கூடுகிறது. புதன்கிழமை தவிர்த்து மற்ற நாட்களில் இவ்விடம் கழிப்பிடமாகப் பயன்படுத்தப் படுகிறது. புதன் கிழமை காலையோ அல்லது செவ்வாய்க் கிழமை மாலையோ வாரத்தில் ஒரு நாள் மட்டுமே 'சுத்தம்' செய்யப் படுகிறது. இங்கு விற்பனை செய்யப்படும் காய்கறிகள் பெரும்பாலும் தரையிலேயே கொட்டி விற்கப் படுவதால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க பொதுக் கழிப்பிடம் ஏற்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– மறுமலர்ச்சிப் பித்தன், ஜோலார் பேட்டை.


வேல் டைப் பௌண்ட்ரி

- புதிய வகை உவண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. போன்: 37693


FREE E - BOOKS , www.thamizham.net.,

## எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் பதில்!

● புதுக்கவிதைகளின் நெரிசல் பற்றி?...

நெரிசல் பயங்கரமாக இருக்கிறது. ஆனால் அதிக கவலை கொள்ள ஒன்றும் இல்லை. இந்தப் புற்றீசல்களைக் காலம் சுலபமாகப் பெருக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. பிரபல வார இதழ்கள் இந்த வாரம் வெளியிடும் கவிதைகள் மறுவார இதழ்கள் வெளிவருவதற்கு முன் மரித்து விடுகின்றன. சிறுகதையை குட்டிக்கதையாகவும், நாவலைத் தொடர் கதையாகவும், கட்டுரையை கிசுகிசு ஆகவும் சீரழித்த பிரபல பத்திரிகைகள் புதுக்கவிதையை துணுக்குகளாகச் சீரழித்திருக்கின்றன.

துணுக்கு கவிதை அல்ல. அரசியல் சுலோகங்கள், கருத்துப் பிண்டங்கள் கவிதைகள் அல்ல. கவிதை ஆழமான அனுபவ அலைகளை எழுப்பக் கூடியது. சொற் சிக்கனம் கொண்டது. தொனி கொண்டது. நுட்பமும் கூர்மையும் கூடிய மொழிக்கு புதிய பரிமாணங்களை அளிக்கக் கூடியது.

தமிழில் புதுக்கவிதையை தோற்றுவித்தவர்கள் ந. பிச்சமூர்த்தி கு.ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர். புதுக்கவிதையின் இரண்டாவது அலையை உருவாக்க முயன்றவர் க.நா. சுப்ரமணியம். சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து'ப் பத்திரிகையில் புதுக்கவிதை வளர்ந்தது. நகுலன், பசுவய்யா, தி. சோ. வேணுகோபாலன், தருமு சிவராமு, சி. மணி, எஸ். வைத்தீஸ்வரன், ஹரி சீனிவாசன் போன்ற பல கவிஞர்கள் அப்பத்திரிகையில் தோன்றினார்கள். பின் வெவ்வேறு சிறு

FREE E - BOOKS , www.thamizham.net.,

பத்திரிகைகள் மூலம் ஞானக்கூத்தன், நா. ஜெயராமன், ஆத்மாநாம், ஆனந்த், தேவதச்சன், தேவதேவன், கலாப்ரியா, நா. சுகுமாரன், வண்ணநிலவன், வண்ணதாசன், விக்கிரமாதித்தன். போன்ற கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களது படைப்புக்களை வாசகர்கள் படித்து இக்காலக் கவிதைகளுக்குரிய அனுபவங்களைப் பெற முடியும். இவ்வனுபவம் எது கவிதை, எது துணுக்கு, எது சுலோகம், எது கருத்துப் பிண்டம் என்பதைத் தீர்மானிக்க உதவும். ●●●

## உலகின் அதி வேகத் தட்டெழுத்தாளர்

உலகிற்கு பல மேதைகளைத் தந்த [illegible] இந்தியா அண்மையில் மேலும் ஒரு [illegible]ளது. உலகின் அதிவேகத் தட்டெழுத்தாளர் டில்லியைச் சேர்ந்த ராஜேந்தர் சிங் என்ற இந்தியரே. இவர் ஒரு பல் வைத்தியர். நிமிடத்திற்கு 483 எழுத்துக்களை 99.97% சரியாக டைப் செய்பவர். பல்கேரியாவில் 23 நாடுகள் பங்கேற்ற தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்கள் போட்டியில் கலந்து கொண்டு இந்தியாவிற்கு முதலிடத்தைப் பெற்றுத் தந்துள்ளார். பல நவீன இயந்திரங்களுடன் ஏனைய தட்டெழுத்தாளர்கள் போட்டியிட்ட போதிலும் திரு. சிங்கிற்கு வெற்றி தேடித் தந்தது அவரது இந்திய தட்டச்சு இயந்திரம் தான்.

– நிலா.


காவல்துறையின் அடாவடித்தனம் தாங்காது பம்பாய் டாக்சி ஓட்டுநர்கள் மாதம் ரூ 20 லட்சம் லஞ்சம் அழுகிறார்கள் – ஏ.எல். க்வாட்ரால், செயலர், பம்பாய் டாக்சி ஓட்டுநர்கள் சங்கம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

கொத்தடிமைகளாக ஊழியம் செய்யும் சென்னை நடுவண் பள்ளி (CBSE PRIVATE MANAGEMENT SCHOOL STAFF) ஆசிரியர்களின் அவல நிலை குறித்து ஒரு கவிதை

நண்பன்: உங்களுக்கு, கிராக்கிப்படி (DA) உண்டா?

CBSE பள்ளி ஆசிரியர்:



கிராக்கிப்படி, பிரயாணப்படி
அகவிலைப்படி, பஞ்சப்படி
என்று கண்டபடி
என்னிடம் பேசாதே!
நாங்கள் இன்னும்
சம்பளப்படிகளையே (BASIC PAY)
சரிவரப் பார்க்கவில்லை
எங்கள் நிலை அப்படி!

— அனுப்பியவர்: G. முத்துக்கிருஷ்ணன்.

"ஒரு நாள்.."



உண்மையை விவாகரத்து
செய்தே
தேர்தல் அறிக்கைகள்
தேனாய் வெளியிடும்
அரசியல் கட்சிகளே!
மக்கள் ஒருநாள்
உங்களையும்
விவாகரத்து செய்வார்
என்ற மமதையிலா!

— பறம்பை பரணி

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஒரு வாசகரின் குமுறல்

# டவுன் பஸ்கள்

கோவை உட்பட பல பெரிய நகரங்களில் டவுன் பஸ்களில் சில ஆண்கள் செய்யும் அடாவடித்தனத்தைப் பற்றி எழுத வேண்டியது அவசியம். எல்லா பஸ்களிலும் பாதி சீட் வரை பெண்களுக்கும் பாதி ஆண்களுக்கும் ஒதுக்கி இருப்பதே தெரியாதது போல வேண்டுமென்றே பெண்கள் சீட்டையும் அடைத்துக் கொண்டு எருமை மாடுகள் போல உட்கார்ந்து கொள்கிறார்கள். கைக் குழந்தையுடன் நிற்கும் பெண்கள் இடம் கேட்டால் கூட அமர்த்தலாக அமர்ந்திருப்பார் சிலர். பெண்கள் நின்று கொண்டிருக்க "பெண்கள்" என்று எழுதப்பட்டிருக்கும் வாசகத்தின் கீழ் வெட்கமில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் கேடு கெட்டவர்களுக்கு தட்டிக் கேட்



## இந்த ஒதுக்கீடு

வயது வந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் அன்புநிலை குறிப்பாகத் திருமணத்திற்கு முன்பு ஏற்படும் அன்பு நிலை பெருவாக ஐரோ - அமெரிக்க நாடுகளில் அனுமதிக்கப் படுகிறது. பள்ளியிலும் பின்னர் பல்கலைக் கழகத்திலும் அலுவலகங்களிலும் ஆடவரும் பெண்டிரும் கலந்து பழகுகின்றனர்.

பெண்களுக்காகத் தனிப்பள்ளி, தனிப்பல்கலைக் கழகம் என்று ஒதுக்கப்படுதல் பொதுவாக இல்லை. பேருந்தில் தனி இடம், இரயிலில், கப்பலில், விமானத்தில், திரையரங்குகளில் பெண்களுக்கு எனத் தனி இடம் ஒதுக்கப்படுவதில்லை. ஒரு சில பல்கலைக் கழகங்களில் டாய்லட்டுகள் கூட இரு பாலாருக்கும் தனித்தனியாக அமையாமல் பொதுவா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆண் நாய்கள்

ுவர்கள் யாரும் இல்லை என்ற எண்ணமா? பெண்கள் முன்படியிலும் ஆண்கள் பின்படியிலும் ஏறி இறங்க வேண்டும் என்பது டவுன்-பஸ்களில் ஏற்பாடு. ஆனால் முக்கால்வாசி ஆண்கள் ஏறியிறங்கப் பயன்படுத்துவதும், நிற்கவும் செய்வது பஸ்ஸின் முன் பக்கத்தைத்தான். பெண்கள் கூட்டமாக ஏறும் போது சென்று இடித்துக் கொண்டு ஏறுவது, உள்ளே நிற்கும் போது இடித்துக் கொண்டும் உரசிக் கொண்டும் நிற்பது இந்தக் கேடிகளின் வேலை. பஸ் உரிமையாளர்கள் முன் பகுதியில் ஆண்கள் இருக்கக் கூடாது என்று தடை கொண்டு வர வேண்டும் அல்லது எல்லாப் பெண்களும் இந்த நாய்களுக்கு செருப்படி கொடுக்கப் பழக வேண்டும். –நா. செந்தில் முரளி

# அவசியம்தானா?



கவே அமைந்துள்ளன. பெண்களுக்குத் தனிப்பள்ளி, தனி இடம், தனி ஒதுக்கிடம் என்று அமைத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே கற்பனைச் சுவர் ஒன்றை வானளாவ எழுப்பி, ஆணையும் பெண்ணையும் கற்பனை உலகில் மிதக்க விடும் பழக்கம் சிறிது கூட மேற்கு நாடுகளில் இல்லை. ஒருவரை ஒருவர் 'மனிதர்' (HUMAN BEING) என்று பார்க்கிற இயல்பான பார்வையே வளர்க்கப்பட்டிருக்கிறது. உடலியலால் இயல்பாக அமைந்துவிட்ட ஆண் - பெண் வேறுபாட்டிற்குத் தனிப்பெரும் முதன்மை கொடுத்து அஃது உள்ள இயலையும் பாதிக்கும் அளவுக்குப் பெருக்கப்பட்டிருக்கவில்லை.

நன்றி: பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள் எழுதிய பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

கதை

# ஜோதிடம் பலித்தது

ஜோதிடம் பார்ப்பதில் மிகவும் ஆர்வமுடைய செல்வந்தர் ஒருவர், ஒருநாள் ஒரு ஜோதிடரை அணுகி அதிர்ஷ்டத்தை மீட்க நிவாரணம் ஏதும் உண்டா? என்று கேட்டார்.

அதற்கு ஜோதிடர் எதையோ கணித்துப் பார்த்து செல் வந்தரிடம் "இது மிகவும் எளிதான செயல். நீங்கள் அதிகா லையில் படுக்கையை விட்டு எழுந்ததும் வேறு யார் முகத்திலும் விழிக்காமல் இரண்டு காகங்கள் ஜோடியாக ஒரு மரக்கிளை யில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்து விட்டால் உங்களைப் பிரிந்து சென்ற அதிர்ஷ்ட தேவதை உங்களை மீண்டும் வந்தடையும்" என்று பரிகாரம் கூறினார்.

ஜோதிடத்தில் அபார நம்பிக்கை கொண்டுள்ள செல் வந்தர் ஜோதிடருக்கு வேண்டிய காணிக்கையைக் கொடுத்து அனுப்பி விட்டு தன் வீட்டு வேலைக்காரனை அழைத்தார்.

அவனிடம் ஜோதிடர் கூறிய ஆலோசனையைக் கூறி அதிகாலையில் இரண்டு காகங்கள் ஜோடியாக இருப்பதைப் பார்த்து விட்டால் உடனே தன்னை எழுப்பி தனக்கு அந்தக் காட்சியைக் காட்ட வேண்டும் எனப் பணித்தார்.

வேலைக்காரனும் அன்று முதல் அதிகாலையில் எழுந்தவு டன் காகங்கள் ஜோடியாய் இருக்கின்றனவா என்று பார்த்து விட்டுத் தன் காலைப் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தான்.

நாட்கள் பல கடந்தன. தனவந்தரும் வேலைக்காரனைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டார். ஒருநாள் வேலைக் காரன் கண்களில் இரண்டு காகங்கள் ஒன்றாக இருப்பது தென் பட்டன. உடனே அவன் ஓடிச் சென்று ஜோடிக் காகங்களைக்

FREE E - BOOKS , www.thamizham.net.,

கேட்ட எஜமானனை எழுப்பினான். எஜமானனும் மகிழ்ச்சி பொங்க தன் கண்களை இறுக மூடிக் கொண்டு வேலைக்காரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு காகங்களைக் காண விரைந்து வந்தார்.

என்ன ஆச்சரியம்! இவர்கள் வரும் முன்னர் ஒரு காகம் பறந்து விட்டது. கண் விழித்துப் பார்த்த தனவந்தர் சினமுற்று வேலைக்காரன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார். பொய் சொல்லி விட்டான் என்று அவனை மிகவும் கடிந்தார்.

வேதனைப்பட்ட வேலைக்காரன் தன் எஜமானனை நோக்கி இரண்டு காகங்கள் ஜோடியாக இருப்பதை நான் பார்த்தது உண்மை. இவற்றைப் பார்த்த அதிர்ஷ்டம் தான் உங்களிடம் அதிகாலையிலேயே அறை வாங்கச் செய்தது.

எனவே இக்காக்கங்களைப் பார்த்திருந்தால் உங்களுக்கும் இது போன்ற ஒரு அதிர்ஷ்டப் பரிசு தானே கிடைத்திருக்கும் என மனவேதனையோடு கூறினான். இதைக் கேட்ட செல்வந்தர் தன் தவறை உணர்ந்தார். - யாரோ

# ரூ.1.25 க்குத் திருமணம்

இந்தியத் திருமணங்கள் வரதட்சணைக் கொடுமைகளையும் அதிக ஆடம்பரத்தையும் நினைவுறுத்துபவை. இதே இந்தியாவில்தான் ரூ.1-25 செலவில் மிக சிக்கனமான எளிமையான திருமணங்கள் விளம்பரமின்றி நடந்து வருகின்றன. சீக்கியர்களில் ஒரு பிரிவினரான 'நம்தாரிகள்' என்னும் இனத்தவரே இத்தகைய எளிய திருமணங்களின் முன்னோடிகள். ஆடம்பரத் திருமணம் நடத்துவதிலுள்ள போட்டி சிக்கனத் திருமணம் நடத்தும் போட்டியாக மாறுமா?

- நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

அரசியல் காழ்ப்பு காரணமாக அண்ணாவின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுபவர்கள் சரியான பார்வையற்றவர்கள். இந்த நூற்றாண்டு தமிழர் தலைவர்களில் அபார திறமைகள் படைத்தவரும், இந்த நாட்டு மக்களின் சுபாவத்தைப் புரிந்து கொண்டவரும் அண்ணாவைப் போல யாரும் இல்லை

கன்னிமரா நூல்நிலையத்தில் அண்ணாவின் விரல் படாத நூல்கள் இல்லை. தமிழ்நாட்டின் மிகப்பெரும் பேச்சாளர்களான சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோரைப் பேச்சுப் போட்டிகளில் புறங்கண்ட பேச்சாற்றல் அண்ணாவினுடையது.



# அண்ணா என்கிற மனிதர் 10

யேல் பல்கலைக்கழகம் உலகத்தின் திறமை பான தலைவர்களுக்கு வழங்கும் "சப்-பெலோஷிப்" விருதை சரியாகவே அண்ணாவுக்கு வழங்கியது.

அண்ணாவின் இந்தத் திறமைகள் எல்லாவற்றையும் வி· அவருக்கு வெற்றியளித்தது இந்தத் தமிழ் மக்களின் சுபாவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டதும் அதற்கேற்ப செயல்பட்டதும் தான்.

குடும்பப்பாசம் என்பதைப் புனித உணர்வாகக் கொள்ளும் தமிழர் மத்தியில் அதே உணர்வை வைத்து தன் கட்சியைக் கட்டினார். அண்ணா. கட்சிக்குத் தான் அண்ணனாகவும், தன்னைப் பின்பற்றுபவர்களைத் தம்பியாகவும் கொண்டார். தன் குடும்பத்தை வி

FREE E - BOOKS , www.thamizham.net.,




கட்சி தம்பிகளையே உண்மை
யான சொந்தக் குடும்பமாக
அவர் மதிப்பதாகத் தம்பியரும்
உணர்ந்தனர்.

சென்னை மாநகராட்சித்
தேர்தலில் 1959 இல் தி.மு.க.
அமோக வெற்றி பெற்று
ரிப்பன் கட்டடத்தைக் கைப்
பற்ற முன்நின்று உழைத்தவர்
கலைஞர் மு. கருணாநிதி.
தேர்தல் வெற்றி விழாவில்
கலைஞருக்கு அண்ணா கணையாழி பூட்டி கௌரவித்தபோது, தன் மனைவிக்கு நகை வாங்கக்கூட கடைகளுக்குச் செல்லாதவர் தம்பி கருணாநிதிக்காக கடை கடையாக ஏறி இறங்கி இந்தக் கணையாழியை வாங்கி வந்ததாகத் தெரிவித்தபோது தம்பிமார்களின் பாசநெருக்கம் புரிந்தது.

சமயம் கிடைத்தபோதெல்லாம் கட்சியின் முன்னணி தலைவர்களுக்குப் புகழாரம் சூட்டி ஊக்குவிக்க அண்ணா தவறியதில்லை. புகழைவிட போதையளிப்பது எதுவுமில்லை என்பதை உணர்ந்தவர் அண்ணா.

கட்சிக்கு வெளியேயும் அண்ணா தமிழ்மக்களின் பலவின உணர்வுகளுக்குத் தீனி போட்டார். இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும் தேவையான காலந்தவறாமை, கொள்கைப் பிடிவாதம், சுத்தம் இவை அண்ணாதுரையிடம் இல்லை என்பதே அவர் பாமர மக்களிடம், அவர்களில் ஒருவராய் ஏற்றுக் கொள்ளப்பட காரணமானது.

"பிடிவாதம் என்பது அண்ணாதுரையிடம் கிடையாது" என்று

FREE E - BOOKS , www.thamizham.net.,

அவர் தாயார் பங்காரம்மா பேட்டியொன்றில் ஒப்புக்கொண்டுள்ளது சிறப்பான பண்பாகக் காட்டப்பட்டுள்ளது. (குமுதம்: 23-3-67 பக்: 7)

தன் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கப் பயணம் சென்ற அண்ணா திரும்புகையில் ஜப்பான் வழியாகச் சென்றார். "அமெரிக்காவின் முன்னேற்றம் என்னைக் கவரவில்லை. ஜப்பானின் முன்னேற்றம் தான் என்னைக் கவர்ந்தது. "தமிழகத்தை இதுபோல் முன்னேற்ற முற்படுவேன்" என்றார். ஜப்பான் முன்னேறியதற்கு முக்கிய காரணங்களில் அம்மக்களின் காலந்தவறாமை சிறப்பானதாகும். முதல் நாள் மாலைக் கூட்டத்திற்கு, மறுநாள் காலை வந்து சேரும் தலைவர் அண்ணா எப்படிக் காலந்தவறாமையை இந்நாட்டு மக்களுக்குப் போதிக்க முடியும்? இன்னும் சொல்லப் போனால் பலமணி நேரம் காலந்தவறி கூட்டத்திற்கு வருவதை ஒரு நாகரிகமாகக் கொண்டு வந்ததே அண்ணாவும் தம்பிகளுந்தான்.

உலகின் பார்வையில் நம்மவர்கள் கேவலப்பட்டுக் கொண்டிருப்பதற்கு நமது அடிப்படைத் தூய்மைக் குறைவும் ஒரு முக்கிய காரணம். மிருகங்களைப் போல தூய்மை உணர்வின்றி வாழும் நம் பாமர மக்களின் கலாச்சாரத்தை மாற்ற அண்ணா ஒரு வரி கூட எழுதியதில்லை; ஒரு வார்த்தை கூட கண்டித்துப் பேசியதில்லை. காரணம் அவருக்கே அதில் பிடித்தம் இல்லை. அண்ணாதுரையின் துணைவியாரே இதனை ஒப்புக்கொள்கிறார்.

"பெரியார் கிட்ட அவர் கத்துக் கிட்டது பகுத்தறிவும் சுயமரியாதையும் மட்டுமில்லே; தினசரி குளிக்காததும் தான்" (ராணி அண்ணாதுரை பேட்டி, தமிழரசு: 1-10-84 பக்: 40)

தமிழ்ப் பொது மக்கள் களைய வேண்டிய இந்தக் குறைபாடுகள் நீண்ட நெடுங்காலமாக இங்கு வேரூன்றி விட்டன. இந்தக் குறைபாடுகளுக்கு அவரும் இலக்கானது பொது மக்களுக்கு இதமளித்தது. பொது மக்கள் எளிமையாகப் பின்பற்றக் கூடியத்

FREE E - BOOKS , www.thamizham.net.,

தலைவராக அண்ணா விளங்கினார்.

அண்ணாவை அடுத்த நூற்றாண்டு சரியான இடத்தில் நிறுத்தும். காலத்திற்கு யாரும் லஞ்சம் கொடுத்து சரிக்கட்டி விட முடியாது. அண்ணாவுக்கு முன் இருந்த தமிழகத்தைத் தன் வரவால் அண்ணா பாதித்தார் என்பது உண்மைதான். அந்த பாதிப்பால் நாட்டுக்கு நன்மை விளைந்தது போலத் தீமையும் விளைந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியா உண்மை.

அண்ணா காலங்கள் காத்திருக்கும் "மெசையா" அல்ல. ஏனெனில் தனி மனிதர் வரலாறுகளைப் படைப்பதில்லை; காலமே மனிதர்களை மகத்தானவர்களாக்குகிறது. அண்ணாவின் புகழை இன்னும் பரப்பிக் கொண்டிருப்பவர்கள் — அவருக்கு கடவுளுக்கிணையான நினைவுச் சின்னங்களை எழுப்பிக் கொண்டிருப்பவர்கள் யார்? அண்ணா தோன்றி மறைந்ததால் தமிழகத்திற்கு கிடைத்த ஆதாயத்தை விட, இவர்கள் பெற்ற அந்தஸ்தும் ஆதாயமுமே மிகுதி. இவர்களே அண்ணாவைத் துதி பாடுபவர்கள்.

அண்ணாவின் கொள்கைகளில்கூட நம்பிக்கையில்லா இந்த ஆதாயக் கூட்டம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்ட பின்பு, பூதக் கண்ணாடிகள் விலகி அண்ணா என்கிற மனிதரின் உண்மையான உருவம் மட்டுமே நிற்கும்.

(முற்றும்) — எழில்



"துப்பறியும் சாம்பு" என்கிற படக்கதை புத்தகம் எங்கு கிடைக்கும்? தொடர்பு கொள்க: A. RAJARAM, 87, RAJA ST., KUNDALAMPATTY, SALEM - 636010.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## எழுத்து வந்தவை

**புதிய விழுதுகள்** சிறுகதைகள் (11.00) தொகுப்பு: இனியவன்

**ஆத்ம கீதம்** கவிதைகள் (7.50) கலைமாமணி பட்டுக் கோட்டை குமாரவேல்

**வெற்றிப் பாதையில்...** (19.00) பட்டுக்கோட்டை குமாரவேல் சிந்த மின்ரம் வெளியீடு: புத்தகப் பூங்கா, 24, கல்யாணி முதலி தெரு. இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**அண்ணாயியம்** (நம்பிக்கைக் கருத்துகள் - பி.எச்.டி ஆய்வுரை) (21.00) டாக்டர் வி. விஜயகாந்தன், குமரன் வெளியீடு, 2217, 7 வது தெரு, 11. வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை - 600 040.

**உயரே உயரே** கவிதைகள் (7.00) தொகுப்பாசிரியர்: ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன் - நூதா பதிப்பகம், 4 முத்து தெரு, புரசவாக்கம், சென்னை - 600007.

**சோமநாத்** நாடகம் (8.00) பட்டுக்கோட்டை குமாரவேல் - M/S பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக் குளம், மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

**வெற்றியும் மனோசக்தியும்** (6.00) பிரம்மானந்தம் - அநுராகம், 10, தெளசிப்பிரியன் ரோடு, தி.நகர், சென்னை-17

**நேற்று இன்று நாளை** கவிதைகள், கட்டுரைகள் (3.00) கா. சண்முகநாதர், சத்யா பதிப்பகம், 23, கிழக்கு மாதா கோவில் தெரு, இராயபுரம், சென்னை - 600 013.

**கோழி கூவுது** கவிதைத் தொகுப்பு (1.00) ஆர். ராஜகுமார் வானவில் பதிப்பகம், 5. சுப்பிரமணியன் 4 வது தெரு, கோகுல், சென்னை - 600 012.

**கை விளக்கு** கவிமணி தாசன், சி. ஆத்மீக சிறப்பு மலர், (10.00) ஆசிரியர்: கொ. அண்ணாமலை, புதுப் பாண்டி. திமிரி மாவட்டம், 627852.

**நெருப்பில் விழுந்த விதைகள்** கவிதைத் தொகுப்பு. (7.00) கடலூர் யூரன், ...

**காந்தி காட்டும் பாதை** (4.50) ஐயப்ப நாதன், M/S அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ. 617, மயிலாப்பூர், சென்னை - 600 004.

**நகைச்சுவை நாடகங்கள்** (15.00) அரசு மணிமேகலை, திருமகள் நிலையம், 55 வெங்கட நாராயணா ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

**கதைப் பாடல்களும் சமூகமும்** (9.00) கோ. கேசவன்

**நமது கல்விப் பிரச்சனைகள்** (புதிய கல்விக் கொள்கை பற்றிய ஒரு பார்வை) (4.50) அ. மார்க்ஸ்

**யமன்** (சிவிக் சியிச் 5) (ரூ 5.00) சேரன். ... இமீ மின்றும் ... 20, கோதண்ட பாணித் தெரு. திருச்சி - 612 001.

**மலர்களால் ஒரு மாளிகை** (10.00) கவிஞர் மதிவண்ணன் கவிதா பாலு, 122, பெரியார் பாதை, சென்னை - 600 094.

**குழந்தைகள் கேள்வியும் பதிலும்.** (13.25) பொ. திருகூட சுந்தரம், பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

**தமிழர் திருமண முறைகள்** (6.00) கா. கல்யாணசுந்தரனார் M/S உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர் பதிப்பகம். AE 103. அண்ணா நகர், சென்னை - 600 040.

**புது நானூறு** (கவிதைகள்) (5.00) த. கோவேந்தன் M/S தமிழ் வளர்ச்சிப் பண்ணை 8. பாகவேந்தப் தெரு, ஆண்டவர் நகர், சென்னை - 600 024.

**கிழக்கும் பின் தொடரும்** (கவிதைகள்) 6.00 ரூபாய் M/S கனி முத்துப் பதிப்பகம், அம்பாள் பில்டிங், 727, அண்ணா சாலை, சென்னை - 600 006.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சென்னை ஜி.எச். அப்புறப்படுத்தப்படுமா?

நகரத்தை அழகுபடுத்துவதும், வசதிபடுத்துவதும் திடீர் மோகம் ஏற்பட்டு அரசு செயல்பட்ட அலங்கோலத்தை நாடறியும். ஊரிலுள்ளவர்களின் வயிற்றெரிச்சலையெல்லாம் கொட்டிக் கொண்டு மாநகராட்சி பல கடைகளையும் வீடுகளையும் நகரை வசதிப் படுத்துவதாக, நெரிசல்களைத் தவிர்ப்பதாகச் சொல்லி "சட்டப்படி" இடித்துத் தள்ளியது.

ஆனால் எதை இடித்துத் தள்ள வேண்டுமோ, எதை இடம் மாற்ற வேண்டுமோ அது அரசு நிர்வாகம் - அரசு திட்டமாகக் கருத்தில் கொண்டு கொள்வதே இல்லை.

எந்த இடத்தில் ஒரு பொது மருத்துவமனை இருக்கக் கூடாதோ அந்த இடத்தில் சென்னை பொது மருத்துவமனை உருவாகி விட்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த இடம் சரியாக இருந்திருக்கலாம். ஆனால் இன்று? ஒரு பக்கம் நாற்றமடிக்கும் பக்கிங்ஹாம் கால்வாய், பின் பக்கம் பூங்கா மின்சார ரயில் நிலையத்தின் சந்தடி, எதிரே சென்ட்ரல் ரயில் நிலையத்தின் இடைவிடா இரைச்சல் - இதெல்லாம் போதாதென்று நாளெல்லாம் நெருக்கடியோடு ஓயாத போக்குவரத்தும் வாகனக் கூட்டத்தின் இடைவிடா சந்தடியும், சகிக்க முடியா புகைமண்டலமும் கொண்ட பெரியார் சாலை முன்புறம். நாற்றமும், கொசுவும் இரைச்சலும், புகையும் கொண்ட இதைவிட மோசமான சூழ்நிலை ஒரு நோயாளிக்கு வேறு எங்கும் இருக்க முடியாது.

புதிய நோய்களை உருவாக்கும் சூழலிலா நோயாளிகளை பராமரிப்பது? ஊரிலுள்ள மற்ற இடங்களை இடித்துத் தள்ளும் அரசு தனது மருத்துவமனையை எப்போது அப்புறப் படுத்தப் போகிறது?

— ஸ்டெனிஸ் லாஸ் —

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தமிழில்

39 ஆவது மாநில மருத்துவ மாநாடு நவம்பர் 23ம் நாள் திருச்சியில் நடைபெற்றது. மாநில மருத்துவ கழகத்தின் புதிய தலைவர் டாக்டர் டி.கே. கணேசன் தம் தலைமையுரையில் மருத்துவக் கல்வியைத் தமிழில் பயிற்றுவது கற்காலத்திற்குச் செல்வதாகும் (RETROGRADE) என்று ஆங்கிலத்தில் அழகாகப் பேசியுள்ளார். அதனை நாம் வன்மையாக மறுக்கிறோம். அவர் கூறுகிறார், "ஆப்ஸ்டெட்ரிக்ஸ், கைனகாலஜி போன்றவற்றைத் தமிழில் கற்பிக்க முடியாது" என்று.

ஆம், முடியாது தான்; இத்தகையவர்களால் முடியாது தான். இவர்கள் ஆங்கிலத்தில் போதிக்கும் திறமை பெறுவதற்கு எப்படி ஷேக்ஸ்பியர் போன்றவற்றை விழுந்து விழுந்து படித்தார்களோ, அப்படித் தமிழிலும் முறையாகக் கொஞ்

# ஆங்கிலத்தில் பிழைகள்

ஆங்கிலேயன்
நம்மவர்கள் இன்றும்
மதிக்கிறார்கள் — சிறப்பாக
வெள்ளை விசுவாசத்திற்கு
ஆங்கிலத்தின் மேல் காட்
தப்பித்தவறி ஆங்கில
வித்தியாசமாக உச்சரித்
கெட்ட வார்த்தை சொன்னது
நமுட்டு சிரிப்பு சிரிப்பார்
யோ, எழுத்துப் பிழையோ
என்று மதிப்பார்கள் (ஆங்
கம் முழுவதும் பேசும் பல
ஒவ்வொரு மாதிரி உச்சரிப்
ஆங்கிலேயர்கள் கூட தங்கள்
உரவு புனிதம் காட்டுவது
விசுவாசம் அவர்கள் குருதி
பது போல, தாய் மொழி மேல்
மையும் பதிந்து விட்டது. வட இந்தி
தமிழ் உளுக்கு இணையாகத்
கள் "டாமிலில் சாதாரணமாக
மாட்டார்கள். பழம் — பலமாகும்
கிலேயன் மதுரை திருச்சி, திருவை
கத்திணாறி மெட்ராஸ் டிரிச்சி டாப
இவர்கள் நாகரீகமாக்கி தப்பாகவே
ஆங்கிலத்தில் தவறுவது
காரணம் அது நமக்கு அந்நியமொழி.
எழுத வராது என்பதும் பெருமையல்ல.

FREE E - BOOKS , www.thamizham.net.,

நம்மை விட்டுச் சென்றாலும்
ழைய முதலாளியாகவே
தமிழர்களின் ஆங்கில -மூத
எடுத்துக்காட்டு, நம்மவர்கள்
டும் புனிதத்தனம்.
சொல்லை யாராவது கொஞ்சம்
தால் போதும் - மோசமான
போல் பார்ப்பார்கள் அல்லது
கள். ஆங்கில வாக்கிய பிழை
நேர்ந்தால், அநாகரீகமானவன்
கிலத்தைத் தாய்மொழியாக உல
மரிவினர் ஒவ்வொரு நாட்டிலும்
பது இவர்களுக்குத் தெரியாது
மொழியின் மேல் இவ்
இல்லை.) எஜமான
யால் ஊறிப்போய் இருப்
மாற்றாந்தாய் மனப்பான்
யர்கள் இப்படி இல்லை!
என்ற நினைப்பில் இவர்
பிழை செய்யத் தயங்க
மிப்பது - நுப்பதாகும். ஆங்
லிக்கேனி என உச்சரிக்
ளிகேன் என உளறியதை
உச்சரித்து அகமகிழ்வர்.
அவமானமில்லை
தமிழில் பேசவேண்டுமானால்
பரிகாசத்திற்குரியது.

— உலகப்பன்.

டாமிலிஷ் ?

# ஏன் முடியாது!

தம் பழத்துக் கொள்ள வேண்
டும். மொழியில் [illegible]
கூடத் திறமையில்லாமல்
எப்படி அம்மொழியில் பேசுதல்
இயலும்?

ஆப்ஸ்டெட்ரிக்ஸ் என்பதை
"மகப்பேறு மருத்துவம்" என்
றும் ஜீனகாலஜி என்பதை
தாய்சேய் மருத்துவம்" என்றும்
அழகாக, எளிதாகக் கூறலா
மே! கடினமான மருத்துவக்
கலை நுணுக்கங்களை
இலக்கிய நயம் தோன்ற
யாப்புநெறி பிறழாமல்
கவிதை அந்நாளில் தந்தவர்
கள் தமிழர்கள். தமிழ்வல -
தமிழைவிட வளம் குறைந்த
மொழியில் கூட மருத்துவக்
கலையைக் கற்பித்துவிட
முடியும். எல்லாம் சொல்பு
வர் திறமையைப் பொறுத்
ததே.

தமது திறமையின்மையை
மொழியின் பால் ஏற்றிக் கூறுவது
அறிவுடைமையாகாது.

— சிட்டி பாரதி.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் மீது வழக்கு!

வானிலை ஆராய்ச்சி நிலையம் சொல்வது நடக்காது; சொல்லாதது நடக்கும். நம் நாட்டில் இவர்கள் பத்திரிகைகளுக்கு சிரிப்புத்துணுக்கு வழங்கவே பயன்படுகிறார்கள். ஆனால் மேலை நாடுகளில் இவர்கள் தவறாகச் சொன்னால் மக்கள் விட மாட்டார்கள். அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சி நம்மவர்களைச் சிந்திக்க வைக்கும்: 'புயல் வரும் என்று தெரிந்திருந்தால் என் கணவர் மீன் பிடிக்கச் சென்று இறந்திருக்க மாட்டார்' என்று வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் மீது 2.5 மில்லியன் டாலர் நஷ்ட ஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்திருக்கிறார் ஒரு அமெரிக்க மீனவரின் மனைவி

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சுட்டி" 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 27, 30 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0·75 காசு மற்ற இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஒருத்திக்கு 300 செருப்புகள்

ஒருத்திக்கு 300-ஜோடி செருப்புகள் இருக்கின்றனவாம் - 7.12.85 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸில், வருமான வரி உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக நடுப்பக்கத்தில் வந்த ஒரு செய்தி! இந்த செய்தி வந்ததுடன் மவுண்ட் ரோடு பாட்டா செருப்புக் கடையில் செருப்புக்களின் விலைகள் எப்படியிருக்கின்றன என்று பார்த்தபோது கிடைத்த விவரங்கள்:

* ஏற்றுமதி வகையைச் சார்ந்த, பெண்கள் அணியும் ஒரு ஜோடி செருப்புக்களின் விலை → ரூ 299.90
* மிதி செருப்புக்களின் மிக உயர்ந்த விலை → ரூ 199.90
* ஷூ-க்களின் மிக உயர்ந்த விலை → ரூ 279.90

மேலே குறிப்பிட்ட விலைகளில் விற்பனைவரி அடங்காது.

செய்தியில் குறிப்பிட்டிருந்த அந்த அம்மையார் சாதாரண செருப்பையா வைத்துக் கொண்டிருப்பார்? பாட்டாவில் பார்த்ததைப் போன்று மிகவும் விலையுயர்ந்த செருப்புக்களைத்தானே வைத்துக்கொண்டிருப்பார்? ஒரு ஜதை செருப்புக்களுக்கு நூறு ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவரிடம் உள்ள செருப்புக்களின் மதிப்பு மட்டும் "முப்பதினாயிரம் ரூபாய்!

நாமெல்லாம் செருப்பு என்பது நடந்து செல்லும் வழியில் இருக்கும் அசுத்தங்கள் காலில் பட்டு வீட்டுக்கு வந்து விடாமல் இருப்பதற்காக - முட்கள், ஆணிகள், கண்ணாடி துண்டுகள் குத்தி விடாமல் இருப்பதற்காக - வெயில் கால்களைச் சுடாமல் இருப்பதற்காக என்று தான் நினைக்கிறோம். ஆனால் செல்வந்தர்களுக்கு செருப்பு என்பது ஒரு அழகு சாதனம்!

ஆனால் இவ்வாறு விலை உயர்ந்த செருப்புக்களைப் போட்டுக் கொண்டு இவர்கள் பெரும்பாலும் நடப்பதே இல்லை; அவ்வாறு நடந்தாலும் அது மொசைக் தரையின் மீது விரிக்கப்பட்டுள்ள கம்பளங்களின் மீதும் தான்! இப்படி ஒரு புறம் இருக்க -

இருவண்டிகளில் எருதும் சுமக்க முடியாத அளவுக்கு

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுமைகளை ஏற்றிக் கொண்டு, அவற்றைக் கொளுத்தும் வெயிலில் கொதிக்கும் தார் ரோடின் மேல் வெறுங்கால்களோடு இழுத்துச் செல்பவர்களும் தானே இந்தியாவில் இருக்கிறார்கள்?

இந்தியாவில் முக்கால்வாசி பேருக்கு மேல் மாதம் ஒன்றுக்கு ரூ300 க்கும் குறைவாகவே வருமானம் இருக்கும்! இந்த நிலையில் வசதி படைத்த ஒரு சிலரை மட்டும் தங்கள் காலில் போடும் ஒரு ஜதை செருப்புக்களுக்காக ரூ300 செலவு செய்ய இந்திய அரசு அனும திக்கலாமா? அதுவும் 300 ஜதை செருப்புக்கள் வைத்துக்கொள்ள இந்த அரசு இடம் தரலாமா?

— ஞானம்

# பகைமை போரில்தான்



ஈரானால் சிறைபிடிக்கப்பட்ட ஈராக்கிய போர்க்கைதிகள் சிலருக்கு ஈரானிய துருப்புக்கள் குளிர்பானம் தருவதை படத்தில் காணலாம். பகைமை போரின்போது தான் சிறைப்பட்ட பின்னர் அல்ல என்பதை காட்டுவதாக அமையும் காட்சி.

ஈரான்–ஈராக்கின் தென்பகுதி எல்லைத் தாக்குதலின்போது இந்த ஈராக்கிய துருப்புக்கள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

உலகில் முதல் மாணவர் ஆட்சிக்கு வாழ்த்துக்கள்

சினிமா நடிகர்கள் நாட்டின் முதல்வர்களாய் இருப்பதை விட மாணவரே ஒரு மாநிலத்தில் முதல்வராய் பொறுப்பேற்றிருப்பது பெருமைக்குரியதாகும்.


இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்பது மாறி, இளைஞர்கள் இன்றே தலைவர்களாக ஆகி விட்டார்கள். இளைஞர் ஆண்டின் முடிவில் இது ஓர் முத்தாய்ப்பு வைப்பது போன்ற நிகழ்ச்சி.

கணபரிஷத் கட்சியின் இனவாதப் பார்வைகள், நமக்கு முற்றிலும் உடன்பாடானவை அல்ல என்பது வேறு [illegible]யம். எனினும் இந்த மாணவ இளைஞர்களின் அழுக ஈடுபாட்டை நாம் மதித்தாக வேண்டும். சாதனைகளை மகத்தாக நிறைவேற்ற சவால்களை ஏற்று முன்னோக்கிச் செல்லும் இந்த அஸ்ஸாம் இளைஞர்கள் பாராட்டுக்குரியவர்களே.

"அசாம் [illegible] தேர்தலில் மக்கள் தீர்ப்பை ஏற்போம்" என்று [illegible] பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு புறம் கூறினாலும் [illegible] "கணபரிஷத் கட்சிக்கு அளவுக்கு அதிகமாக [illegible] ஓட்டு விழுந்தது எப்படி என்று மத்திய அரசு [illegible] விசாரணை நடத்த வேண்டும்" என்று அசாம் [illegible] காங்கிரஸ் கட்சி தீர்மானம் போட்டுள்ளது. காங்[illegible]கிரஸ் தன் தோல்வியுற்றது என்று இவர்கள் [illegible] சுய விமர்சனம் செய்வதை விட்டு ஜெயித்தவர் [illegible] மேல் பாய்வது சிறுபிள்ளைத்தனமாகும். உலக மாணவர், இளைஞர்களுக்கு இச்சாதனை புத்துணர்வூட்டும்.

— இசு.

FREE E - BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயணபாரதி, வெளியிடுபவர்: கு. ராமசந்திரன். 1494. அண்ணா நகர், சென்னை-600040. அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, Dr. நடேசன் Road திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

FREE E - BOOKS , www.thamizham.net.,

FREE E - BOOKS , www.thamizham.net.,

கட்டுரை மலர் இதழ் 1, ஜூன் 1986 Regd. No. TN/MS(N)/311
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E - BOOKS , www.thamizham.net.,